**டிசம்பர் - 15**

**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்." - சங் 23.1.**

கர்த்தர் தன்னுடைய ஜனங்களை தன்னுடைய ஆடுகள் என்று அழைப்பதில் அவர்களில் தான் வெளிப்படுத்தியிருக்கும் குணத்தின் மிகவும் அர்த்தமுடைய ஒரு சின்னத்தைத் தெரிந்து கொண்டார். மிகவும் கவனிக்கக்கூடிய செம்மறி ஆடுகளின் தனிப்பட்ட குணங்கள் சாந்த குணமும், சுலபமாகப் பழக்ககூடிய குணமும், தங்களைப்பற்றிய பொறுப்பை தாங்களே முற்றிலுமாக ஒப்படைத்திருக்கிற மேய்ப்பனுக்குக் கீழ்ப்படிதலாகும். உண்மையான ஆடு மேய்ப்பனுடைய மிகவும் தெளிவற்ற குரலையும் கவனமாகக் கேட்கும். அதாவது, அவன் அவருடைய வார்த்தைகளை இருதயத்தில் உயர்வாக மதித்துக் காப்பாற்றுவான். அவருடைய பராமரிப்புக்களைத் தெரிந்து கொள்ள ஊக்கமாய்க் கவனம் செலுத்துவான். தன்னுடைய சிலாக்கியமாயிருக்கிற கர்த்தரோடு கொண்டுள்ள அந்த ஒற்றுமையையும் சொந்த ஐக்கியதையும் வளர்ப்பான். இவ்விதமாக அவரில் நிலைத்திருக்கிறவர்கள் ஒருபொழுதும் வழிதவற மாட்டார்கள். அவர்கள் ஒருபொழுதும் தங்களுடைய வழியை இழக்கக் கூடாதவர்களாயிருப்பார்கள். **- Z 02, 365 (3116).**

யேகோவா நம்முடைய மேய்ப்பராயிருக்கிறார். நிச்சயமாகவே நம்முடைய மேய்ப்பராகிய அவர் நல்லவராக இருக்கிறார். ஏனென்றால், நம்மிடத்தில் அவர் சாதுவாகவும்,அன்பாகவும், சுறுசுறுப்பாகவும், சுயவெறுப்புள்ளவராகவும், நுண்ணறிவுள்ளவராகவும், பலமுள்ளவராகவும், மாறாதவராயுமிருக்கிறார். அவருடைய ஆடுகளாகிய நம்முடைய தேவைகளுக்கு அன்புப்பணி செய்கிறார். நம்முடன் கூட செல்கிறார். நம்மை ஒன்று சேர்கிறார். நாம் பலவீனராயிருக்கும்போது , நம்மைத் தூக்கிச் சுமக்கிறார். நம்மை பேர்சொல்லி அழைக்கிறார். நமக்கு உணவும், தண்ணீரும் கொடுக்கிறார். நாம் செல்ல வேண்டிய பாதையை நமக்கு ஏற்பாடு செய்கிறார். சரியான பாதைகளில் நம்மை நடத்துகிறார். ஆரோக்கிய நிலையை நமக்குத் திரும்பக் கொடுக்கிறார். பெருங்கஷ்டங்களை இலகுவாக்குகிறார். களைத்திருக்கிற நமக்கு இளைப்பாறுதல் அளிக்கிறார். உபத்திரவத்தில் நமக்கு ஆறுதல் அளிக்கிறார். அபாயத்தைக் குறித்து நம்மை எச்சரிக்கிறார். அதிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றார். நம்மை பயிற்சி கொடுக்கிறார். உலகத்தின் அசுசிகளிலிருந்து நம்மைக் கழுவுகிறார். வழிதப்பித்திரியும் போது நம்மைத் தேடுகிறார். நம்முடைய உடன் ஆடுகளுக்குத் தீங்கு செய்வதிலிருந்து நம்மைத் தடுக்கிறார். மற்றவர்களுடைய ஆடுகளிலிருந்து நம்மைப் பிரிக்கிறார். கூலியாட்களிடமிருந்து நம்மை விடுவிக்கிறார். நல்ல மேய்ப்பர்களண்டையில் நம்மை ஒப்புவிக்கிறார். நம்மை நன்மை பயக்கக் கூடியவர்களாக்குகிறார். ஆம், நம்முடைய மேய்ப்பராகிய யேகோவா நல்லவர். **- P 32, 197.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஆதி 49.24, சங் 23.2-6, 27.1, 37.25, 56.4.11, 118.6, ஏசா 40.11, லூக் 15.3-7, யோவா 10.1-16, எபி 13.6.20, 1பேது 2.25, 5.4.**

**கோபுர வாசிப்பு : Z 14, 198 (R 5490).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் மேய்ப்பரின் விசேஷித்த பராமரிப்பு எனக்குக் கிடைத்ததா? எப்படி? நான் எவ்வாறு பதிலளித்தேன்?**